# முழங்கால் யுத்தம்

## "பிரார்த்தனை நேரம்"



# தேவனின் பாதத்தில்...

L.ஜோசப்

THANKS TO OUR ALMIGHTY GOD. MAY GOD BLESS YOU AND MAY HOLY SPIRIT LEAD YOU

## To the Readers

Dear Beloved Brother/Sister, Thank you for downloading this Ebook. Please note that this Ebook is copyrighted by the author of the book or the publisher of the book or as mentioned in the book. Word of God Ministries is just providing you this ebook as free of cost and it is for your personal use not for commercial purposes.

## To the Copyright Owners

Dear Copyright owners, Word of God Ministries is doing this Free Ebook service to help the people who are not able to find the printed copy of your book from various countries arround the world and to the people who are restricted to have the printed materials in their house. And this will help the readers to improve their spiritual life.

If you want your new books to be published here as Free Ebook, kindly EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489

If you feel that your book should not be published, we are KINDLY REQUESTING YOU TO EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489. We will remove it from our Free Service as early as possible.

## About Word of God Ministries

**Word of God Ministries** was founded in the year 2007, July 29th with the grace and leading of Almighty God by Bro. Yesudas Solomon as an interdenominational ministry. The popular ministry "**Word of God Team**" is one among our various ministries. Now this ministry has 10 branches such as **1)** Word of God Team, **2)** Mobile Ministry, **3)** Internet Ministry, **4)** Deaf Ministry, **5)** Blind Ministry, **6)** Tribal Ministry, **7)** Computer Ministry, **8)** Audio Ministry, **9)** Video Ministry and **10)** Printing Ministry. We all thank our God with full of our heart for using us in His Great Ministry. We need your continuous prayer support. Our vision is to "Reach the Unreached through Technology". Our websites are: www.WordOfGod.in, www.ChristiansMobile.com, www.FreeChristianEbooks.in, www.IndianBibles.net, www.ChristianAudioBooks.in, www.WordOfGodTeam.com, www.WordOfGodMinistry.in, www.KannadaBible.net, www.KannadaChristian.net, www.PrayForKarnataka.com

# முழங்கால் யுத்தம்

## "பிரார்த்தனை நேரம்"

## (தேவனின் பாதத்தில்)

*"இயேசுகிறிஸ்து என் விண்ணப்பத்தைக் கேட்டார்; என் ஜெபத்தை ஏற்றுக்கொள்ளுவார்" (சங் 6:9)*



*தேவ ஊழியன்*

*L. ஜோசப்*

## உங்களோடு!

''ஜெபத்தைக் கேட்கிறவரே...'' (சங் 65:2)

**நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் உன்னத நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!**

தேவகிருபையால், **'முழங்கால் யுத்தம் - தேவனின் பாதத்தில்'** என்கிற ஜெபக் கையேட்டை வெளியிடுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம்! புதிதாக இயேசு கிறிஸ்துவை அறிந்தவர்கள் தங்கள் தனிப்பட்ட, குடும்ப வாழ்க்கையில் ஏற்படும் சோதனைகள், வேதனைகள், உபத்திரவங்கள், இழப்புகள், தோல்விகள், கவலைகள், பயங்கள், குழப்பங்கள், கலக்கங்கள், ஏக்கங்கள், பெலவீனங்கள் போன்ற கடினமாக சூழ்நிலைகளில், செய்வதறியாது தவிக்கும் நேரங்களில் தேவனை நோக்கி ஜெபிப்பதற்கென சில மாதிரி ஜெபங்களை இந்த ஜெபக்கையேட்டில் கொடுத்துள்ளோம்!



இந்த ஜெபக்கையேட்டினை தேவசமுகத்தில் ஜெபிப்பதற்கென்று ஆயத்தப் படுத்தியுள்ளோம்! உங்கள் வாழ்க்கையில் இக்கட்டான நேரங்களில் இந்த ஜெபங்களை தேவசமுகத்தில் ஏறெடுத்து தேவனிடமிருந்து அற்புதங்களையும், அதிசயங்களையும், சமாதானத்தையும், சந்தோஷத்தையும், மகிழ்ச்சியையும், ஆறுதலையும், ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ளலாம்! நீங்கள் உடைந்த உள்ளத்தோடு, கண்ணீரோடு, பெருமூச்சோடு, ஏக்கத்தோடு, வாஞ்சையோடு தேவசமுகத்தில் உங்கள் இருதயத்தை ஊற்றி ஜெபிக்கும்போது, தேவன் உங்கள் பிரார்த்தனையைக் கேட்டு நிச்சயமாய் உங்களுக்கு பதிலளிப்பார்! உங்களை ஆசீர்வதிப்பார்! அல்லேலூயா! ஆமென்! **தேவநாமம் மகிமையடைவதாக!**

**அன்பும்! ஜெபமும்!!** L. ஜோசப்

''ஜெபத்தை ஏற்றுக்கொள்பவரே...'' (சங் 6:9)

## உள்ளே!


I. தேவனை ஸ்தோத்தரிப்போம்! ... 6

II. இயேசுகிறிஸ்து கற்பித்த ஜெபம்! ... 8

III. விசுவாச அறிக்கை-I ... 9

IV. விசுவாச அறிக்கை-II ... 10

V. ஜெபத்தின் மேன்மை! ... 12

VI. தியானப்பகுதி! ... 14

VII. இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள்! ... 16

VIII. ஜெபத்தலைப்புகள்!

1. இரட்சிப்பிற்காக... ... 18
2. பரிசுத்தமாக வாழ... ... 20
3. தேவசித்தம் அறிய... ... 22
4. பிள்ளைகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக... ... 24
5. தேர்வு எழுதும் பிள்ளைகளுக்காக... ... 26
6. வயது முதிர்ந்தோர்களுக்காக... ... 28
7. திருமணத்திற்காக... ... 30
8. சுகப் பிரவசத்திற்காக... ... 32
9. பிரச்சினைகள் நீங்க... ... 34
10. தோல்வி எண்ணங்கள் மாற... ... 36
11. பெலவீனங்கள் நீங்க... ... 38
12. சோர்வுகள் நீங்க... ... 40
13. துக்கம் மாற... ... 42
14. உபத்திரவங்கள் மாற... ... 44
15. வறுமை சூழ்நிலைகள் மாற... ... 46
16. அடிமைத்தனம் நீங்க... ... 48

IX. பிரார்த்தனையைக் கேட்கும் இயேசு! ... 50

X. வாக்குத்தத்தங்கள்! ... 52

## தேவனை ஸ்தோத்திரிப்போம்!

''ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப்படுத்துகிறான்'' (சங் 50:23)

✲ வெளிச்சமும், இரட்சிப்புமானவரே!

✲ எனக்காக சிலுவை சுமந்தவரே!

✲ ஒரே தேவனாயிருக்கிற கர்த்தரே!

✲ சகலத்தையும் புதிதாக்குகிறவரே!

✲ சத்திய வசனத்தினால் ஜநிப்பித்தவரே!

✲ சத்துருக்களுக்கு பதிலளிக்கிறவரே!

✲ சதாகாலமும் உயிரோடிருக்கிறவரே!

✲ சர்வலோக நியாயாதிபதியே!

✲ மனுஷரில் முந்திப் பிறந்தவரே!

✲ காலைதோறும் விசாரிக்கிறவரே!

✲ நிமிஷந்தோறும் சோதித்தறிகிறவரே!

✲ மன்னுயிரைக் காப்பவரே!

✲ உத்தமர்களை வெறுக்காதவரே!



✲ நீதியின் பலனை அருளிச்செய்பவரே!

✲ இடி முழக்கமாய் சத்தமிடுகிறவரே!

✲ ஜீவத் தண்ணீர் ஊற்றானவரே!

✲ சீர்க்கேடுகளைக் குணமாக்குகிறவரே!

✲ யாக்கோபின் பங்காயிருக்கிறவரே!

✲ நீதியின் வாசஸ்தலமானவரே!

✲ பரிசுத்த பர்வதமானவரே

✲ மீட்பரும், வல்லவருமானவரே!

✲ ஜீவனுடைய ஆவியானவரே!

✲ அக்கின மயமான நிறமுடையவரே!

✲ மகிமையின் சாயலையுடையவரே!

✲ எங்களைக் குணமாக்குகிறவரே!

✲ ஜாதிகளுக்கு ஒளியானவரே!

✲ பூமியின் ரூபத்தை புதிதாக்குகிறவரே!

''இதுமுதல் என்றென்றைக்கும் கர்த்தருடைய நாமம் ஸ்தோத்தரிக்கப் படுவதாக'' (சங் 113:2)

## இயேசுகிறிஸ்து கற்பித்த ஜெபம்!

**(மத்தேயு 6:9-13)**

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப் படுவதாக.

உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக.

எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்.

எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்.

எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும், ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென்!



## விசுவாச அறிக்கை-I

**(சங்கீதம் - 121)**

1. எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன்
2. வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்.
3. என் காலைத் தள்ளாடவொட்டார்; என்னைக் காக்கிறவர் உறங்கார்,
4. இதோ, இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை தூங்குகிறதுமில்லை,
5. கர்த்தர் என்னைக் காக்கிறவர்; கர்த்தர் என் வலதுபக்கத்திலே எனக்கு நிழலாயிருக்கிறார்
6. பகலிலே வெயிலாகிலும், இரவிலே நிலவாகிலும் என்னைச் சேதப்படுத்துவதில்லை.

7. கர்த்தர் என்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்; அவர் என் ஆத்துமாவைக் காப்பார்.

8. கர்த்தர் என் போக்கையும் என் வரத்தையும் இதுமுதற்கொண்டு என்றைக்குங்காப்பார்.

## விசுவாச அறிக்கை-II

*''நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்'' (1யோவா 5:4)*

✲ ''ஒரு வழியாய் எனக்கு எதிராகப் புறப்பட்டு வருவார்கள்; ஏழு வழியாய் எனக்கு முன்பாக ஓடிப்போவார்கள்'' (உபா 28:7)

✲ ''நான் மரண இருளின் பள்ளத் தாக்கிலே நடந்தாலும் பொல்லாப் புக்குப் பயப்படேன்'' (சங் 23:4)

✲ ''நான் கர்த்தரைத் தேடினேன், அவர் எனக்குச் செவிக்கொடுத்து, என்னு



டைய எல்லாப் பயத்துக்கும் என்னை நீங்கலாக்கிவிட்டார்'' (சங் 34:4)

✲ ''இயேசுவை நம்பியிருக்கிறேன், நான் பயப்படேன்'' (சங் 56:11)

✲ ''நான் என்றென்றைக்கும் வெட் கப்படாமலும் கலங்காமலும் இருப்பேன்'' (ஏசா 45:17)

✲ ''எனக்கு விரோதமாய் உருவாக்கப் படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போம்'' (ஏசா 54:17)

✲ ''எவர்கள் எனக்கு விரோதமாய்க் கூடுகிறார்களோ, அவர்கள் என் பட்சத்தில் வருவார்கள்'' (ஏசா 54:15)

✲ ''என்னைத் தப்புவிப்பதற்கு இயேசு என்னோடிருக்கிறார்'' (எரே 15:20)

✲ ''சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்ச் சாத்தனை என் கால்களின்கீழே நசுக்கிப்போடுவார்'' (ரோம 16:20)

*''விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்'' (மாற் 9:23)*

## ஜெபத்தின் மேன்மை!

*''ஜெபத்தைக் கேட்கிறவரே'' (சங் 65:2)*

✲ ''கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்'' (மத் 7:7)

✲ ''கேட்கிறவன் எவனும் பெற்றுக் கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்'' (மத் 7:8)

✲ ''உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால் பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும்'' (மத் 18:19)

✲ ''நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள்'' (மத் 21:22)



✲ ''நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக் கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக் கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும்'' (மாற் 11:24)

✲ ''நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக அதைச் செய்வேன்'' (யோவா 14:13)

✲ ''நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார்'' (யோவா 16:23)

✲ ''கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்'' (யோவா 16:24)

*''ஜெபத்தைத் தள்ளாதவரே'' (சங் 66:20)*

## தியானப்பகுதி!

*''உமது வேதத்திலுள்ள அதிசயங்களை பார்க்கும்படிக்கு, என் கண்களைத் திறந் தருளும்'' (சங் 119:18)*

**(சங்கீதம் - 138)**

1. உம்மை என் முழு இருதயத்தோடும் துதிப்பேன்; தேவர்களுக்கு முன்பாக உம்மைக் கீர்த்தனம்பண்ணுவேன்.
2. உமது பரிசுத்த ஆலயத்திற்கு நேராக நான் பணிந்து, உமது கிருபை யினிமித்தமும் உமது உண்மையினி மித்தமும் உமது நாமத்தைத் துதிப் பேன்; உமது சகல பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும் உமது வார்த்தையை நீர் மகிமைப்படுத்தியிருக்கிறீர்.
3. நான் கூப்பிட்டநாளிலே எனக்கு மறுஉத்தரவு அருளினீர்; என் ஆத்து மாவிலே பெலன்தந்து என்னைத் தைரியப்படுத்தினீர்;



4. கர்த்தாவே, பூமியின் ராஜாக்களெல் லாரும் உமது வாயின் வார்த்தை களைக் கேட்கும்போது உம்மைத் துதிப்பார்கள்.
5. கர்த்தரின் மகிமை பெரிதாயிருப் பதினால், அவர்கள் கர்த்தரின் வழிகளைப் பாடுவார்கள்.
6. கர்த்தர் உயர்ந்தவராயிருந்தும், தாழ்மையுள்ளவனை நோக்கிப் பார்க்கிறார்; மேட்டிமையானவ னையோ தூரத்திலிருந்து அறிகிறார்.
7. நான் துன்பத்தின் நடுவில் நடந்தாலும் நீர் என்னை உயிர்ப்பிப்பீர்; என் சத்துருக்களின் கோபத்துக்கு விரோ தமாக உமது கையை நீட்டுவீர்; உமது வலதுகரம் என்னை இரட்சிக்கும்.
8. கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்; கர்த்தாவே, உமது கிருபை என்றுமுள்ளது.

*''நான் அவரைத் தியானிக்கும் தியானம் இனிதாயிருக்கும்'' (சங் 104:34)*

## இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள்!

''நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது'' (யோவா 6:63)

✲ ''வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்'' (மத் 11:28)

✲ ''உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்'' (மத் 28:20)

✲ ''ஜீவஅப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்'' (யோவா 6:35)

✲ ''என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை'' (யோவா 6:37)



✲ ''நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்'' (யோவா 11:25)

✲ ''நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்'' (யோவா 11:40)

✲ ''சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்'' (யோவா 14:27)

✲ ''உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்'' (யோவா 16:20)

✲ ''என்னைக் காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்'' (யோவா 20:29)

''தேவனுடைய வார்த்தையைக் கேட்டு அதைக் காத்துக்கொள்ளுகிறவர்களே அதிக பாக்கியவான்கள்'' (லூக் 11:28)

## 1. இரட்சிப்பிற்காக!

*''எல்லாமனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்'' (1தீமோ 2:4)*

***பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே! உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!***

இயேசுவே! என்னை உமது கரங்களில் அர்ப்பணித்து ஜெபிக்கிறேன்! தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி இரட்சிக்க வந்தவரே! நான் பாவத்திலிருந்து விடுதலை பெறும்படி ஜெபிக்கிறேன்! என் பாவங்களுக்காக சிலுவையில் ஜீவனையே தந்த இயேசுவே! பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும், பிசாசின் கட்டுகளிலிருந்தும் எனக்கு விடுதலையைத் தாரும்! இயேசுவே! நான் உமக்கு விரோதமாக செய்த எல்லா பாவங்களையும் உமது சமுகத்தில் அறிக்கை செய்கிறேன்! ஆண்டவரே! நான் அறியாமல் செய்த பாவங்களையும், குறை



களையும், குற்றங்களையும் தயவாய் மன்னித்து, ஒழுங்கில்லாத காரியங்களை ஒழுங்குபடுத்தும்! இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி சுத்திகரிக்கும் என்ற வார்த்தையின்படி உமது இரத்தத்தால் என்னைப் பாவமற கழுவி சுத்திகரியும்! இயேசுவே! உமது பிள்ளையாக என்னை சேர்த்துக் கொள்ளும்! இரட்சிப்பின் சந்தோஷத்தினால் நிரப்பி உமது சமாதானத்தை அருளிச்செய்யும்! இன்றிலிருந்து ஒரு புதிய வாழ்க்கையைத் துவங்க எனக்கு உதவி செய்யும்! பாவமில்லாத பரிசுத்த வாழ்க்கை வாழ எனக்கு கிருபை தாரும்!

இயேசுவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு பாவங்களிலிருந்து என்னை இரட்சித்து ஆசீர்வதிப்பதற்காக உமக்கு நன்றி!

***இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! வல்லமையுள்ள பிதாவே! ஆமென்!***

*''இரட்சிப்பு கர்த்தருடையது'' (சங் 3:8)*

## 2. பரிசுத்தமாக வாழ!

''நான் உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர்'' (லேவி 22:32)

***பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே! உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!***

இயேசுவே! உமது பரிசுத்தமுள்ள கரங்களில் என்னை ஒப்புவித்து ஜெபிக்கிறேன்! நான் பரிசுத்தராயிருக்கிறதுபோல நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலும் பரிசுத்தமாக இருங்கள் என்று சொன்ன இயேசுவே! பரிசுத்தமாய் வாழ என்னை அர்ப்பணிக்கிறேன்! எனது வாழ்க்கையில் காணப்படும் உமக்கு பிரியமில்லாத, அசுத்தமான பாவப் பழக்கங்களிலிருந்து எனக்கு பரிபூரண விடுதலையைத் தாரும்! பாவங்களை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவன் இரக்கம் பெறுவான் என்ற உமது வார்த்தையின்படி, நான் உமக்கு விரோதமாய் செய்த பாவங்களை



உமது சமுகத்தில் அறிக்கையிடுகிறேன்! இயேசுவே! என்மேல் கிருபையாய் மனமிரங்கும்! உமது இரத்தத்தினால் என் பாவங்களைக் கழுவி பரிசுத்தப்படுத்தும்! பரிசுத்தத்தை விரும்புகிற இயேசுவே! எனது வாழ்நாளெல்லாம் பரிசுத்தமாக உம்மைப் போல வாழ உதவி செய்யும்! பரிசுத்தத்தைக் காத்துக் கொள்ள எனக்கு கிருபை தாரும்! பெலவீனங்களில் உதவி செய்கிறவரே! பாவசோதனைகளோ, போராட்டங்களோ மேற்கொள்ளாதபடி என்னை உமது பரிசுத்த வல்லமையால் நிரப்பி ஒவ்வொருநாளும் பரிசுத்தமாக வாழ எனக்கு கிருபை செய்யும்!

இயேசுவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு உமது பரிசுத்தத்தால் நிரப்பி பரிசுத்தமாய் வாழ கிருபை செய்வதற்காக நன்றி!

***இயேசுவின் பரிசுத்தமுள்ள நாமத்தில் ஜெபிக்கிறேன்! பிதாவே! ஆமென்!***

''பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்'' (வெளி 22:11)

## 3. தேவசித்தம் அறிய!

*"தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்" (பிலி 2:13)*

***பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே! உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!***

இயேசுவே! உமது மகிமையுள்ள கரங்களில் என்னை ஒப்புவிக்கிறேன்! எனது வாழ்வில் ஒவ்வொருநாளும் உமது சித்தம் மாத்திரமே நிறைவேறும் படியாக ஜெபிக்கிறேன்! இயேசுவே! நீர் இந்த உலகில் வாழ்ந்தபோது, பிதாவின் சித்தத்தை அறிந்து செயல் பட்டதைப் போல, எனது வாழ்வின் எல்லாப் பகுதிகளிலும் உமது சித்தத்தை நிறைவேற்ற கிருபை தாரும்! எனது சித்தத்தின்படி செய்கிறவனோ என் றென்றைக்கும் நிலைத்திருப்பான் என்று சொன்னவரே! உமக்குச் சித்தமில்லாத எந்தவொரு காரியத்திலும் ஈடுபடாத



படிக்கு என்னைத் தடுத்து நிறுத்தும்! இயேசுவே! என் வாழ்க்கையில் ஒவ்வொருநாளும், குழப்பமான சூழ்நிலை களிலும், கடினமான நேரங்களிலும், முடிவெடுக்கும் ஒவ்வொரு காரியங் களிலும் நீர் என்னோடுகூட இருந்து உம்முடைய சித்தத்தை வெளிப்படுத்தும்! இயேசுவே! உமது சித்தத்தை அறிகிற அறிவினால் என்னை நிரப்பும்! உமது சித்தத்தின்படி செயல்பட ஞானத்தினால் என்னை நிரப்பும்! இயேசுவே! உம்மை விட்டு வழிவிலகிச் செல்லாதபடி, உமது சித்தத்தின்படி நடத்தி ஆசீர்வதியும்!

இயேசுவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு உம்முடைய சித்தத்தின்படி என்னை வழிநடத்துவதற்காக உமக்கு நன்றி!

***இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! வல்லமையுள்ள பிதாவே! ஆமென்!***

*"நீங்கள் கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள்" (எபே 5:17)*

## 4. பிள்ளைகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக!

''சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்'' (ஏசா 44:3)

***பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே! உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!***

இயேசுவே! சிறுபிள்ளையாகிய என்னை உமது கரங்களில் ஒப்புவிக்கிறேன்! சிறு பிள்ளைகளை அதிகம் நேசிக்கிறவரே! என்மேல் கிருபையாயிரும்! இயேசுவே! என் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக உமது சமுகத்தில் ஜெபிக்கிறேன்! ஆண்டவரே! உம்மை அதிகமாய் நேசிக்கும் அன்பையும், பயத்தையும், கீழ்ப்படிதலையும் எனக்குத் தாரும்! உம்மை அறிகிற அறிவில் வளர்ந்து பெருக உதவி செய்யும்! இயேசுவே! எனது வாழ்க்கையில் உமது சித்தத்தின்படி என்னைக் கரம்பிடித்து நடத்தும்! இயேசுவே! ஒவ்வொருநாளும் வேதத்தை வாசிக்க, தியானிக்க, அதன்படி நடக்க, கீழ்ப்படிய



எனக்கு உதவி செய்யும்! பரிசுத்தத்தோடு வாழ பெலன் தாரும்! ஆண்டவரே! எப்பொழுதும் உம் பாதத்தில் காத்திருந்து துதிக்க, ஆராதிக்க, ஜெபிக்க உதவி செய்யும்! சாமுவேலைப்போல உமது சத்தத்தைக் கேட்க கிருபை தாரும்! சாலெமோனை போல ஞானத்தினால் நிரப்பும்! இயேசுவே! உம்மைப் போல தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் வளர்ந்து பெருக உதவி செய்யும்! என்னை உமது அபிஷேகத்தினால் நிரப்பும்! ஒவ்வொருநாளும் உமது கரம் என்னோடுகூட இருந்து வழிநடத்தி ஆசீர்வதிக்கட்டும்!

இயேசுவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு என்னை ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்து பெருகும்படி செய்வதற்காக நன்றி!

***இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! ஜெபம் கேளும் நல்ல பிதாவே! ஆமென்!***

''உன்பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள்'' (ஏசா 54:13)

## 5. தேர்வு எழுதும் பிள்ளைகளுக்காக!

''உங்களில் ஒருவன் ஞானத்தில் குறை வுள்ளவனாயிருந்தால்... தேவனிடத்தில் கேட்கக்கடவன்'' (யாக் 1:5)

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே! உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!**

ஆண்டவரே! இந்த நாளிலும் தேர்வு எழுதும் என்னை உமது கிருபையுள்ள கரங்களில் அர்ப்பணித்து ஜெபிக்கிறேன்! இயேசுவே! நீர் எனக்குத் தந்த நல்ல .......................... பள்ளி/கல்லூரி/ மருத்துவ/தொழிற்கல்வி படிப்பிற்காக நன்றி! ஆண்டவரே! நல்ல முறையில் நான் தேர்வு எழுதும் படியாக உமது சமுகத்தை நோக்கி ஜெபிக்கிறேன்! ஞானத்தையும், அறிவையும், புத்தியை யும் எனக்குத் தாரும்! ஆண்டவரே! நான் படித்த ஒவ்வொரு பாடத்தையும் மனதில் வைத்து தேர்வு எழுத வேண்டிய ஞாபக சக்தியைத் தாரும்! இயேசுவே!



தானியேலைப் போல ஞானத்தையும், அறிவையும், புத்தியையும் தாரும்! ஆண்டவரே! தேர்வு எழுதும் நேரத்தில் நீர் என்னோடுகூட இருந்து சிறந்த முறையில் தேர்வு எழுத உதவி செய்யும்! பெலன் தருகின்ற இயேசுவே! எந்தவித பயமோ, கலக்கமோ, நடுக்கமோ, தடுமாற்றமோ, பெலவீனமோ வராத படிக்கு உமது பெலத்தினால் என்னை நிரப்பும்! தேர்வு எழுதுகிற பாடத்தில் அதிக மதிப்பெண்களைப் பெற்று உமது நாமத்தை மகிமைப்படுத்த அருள்செய்யும்! இயேசுவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு அதிக மதிப்பெண்கள் எடுத்து தேர்வில் வெற்றி பெறச்செய்து என்னை ஆசீர் வதிப்பதற்காக உமக்கு நன்றி!

**இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! வல்லமையுள்ள பிதாவே! ஆமென்!**

''வானத்தையும், பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்'' (சங் 121:2)

## 6. வயது முதிர்ந்தோர்களுக்காக!

*''அவர்கள் முதிர்வயதிலும் கனிதந்து, புஷ்டியும் பசுமையுமாயிருப்பார்கள்'' (சங் 92:15)*

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே! உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!**

இயேசுவே! வயது முதிர்ந்த என்னை உம்முடைய கிருபையுள்ள கரங்களில் அர்ப்பணித்து ஜெபிக்கிறேன்! இரக்கத்தில் ஐசுவரியமுள்ள ஆண்டவரே! இத்தனை ஆண்டுகளாக உமது கிருபையினால் என்னைத் தாங்கி சுகத்தோடு, பெலத்தோடு வழிநடத்தி ஆசீர்வதித்தீரே நன்றி! இயேசுவே! என்னையும், என் குடும்பத்தையும் ஆசீர்வதித்தீரே! என் பிள்ளைகளின் பிள்ளைகளையும் காணச் செய்தீரே! நன்றி! ஆண்டவரே! இப்பொழுதும் எனக்கு நல்ல சரீர சுகத்தையும், பெலத்தையும் தாரும்! என் வியாதிப்படுக்கையை மாற்றும்! என் கண்களில் நல்ல பார்வையைத் தாரும்! இயேசுவே! பயம்,



கலக்கம், நடுக்கம் போன்றவற்றிலிருந்து விடுதலையைத் தாரும்! நல்ல தைரியத்தையும், திட நம்பிக்கையையும் தாரும்! கைவிடாத இயேசுவே! தனிமையில் என்னோடுகூட இருந்து பாதுகாத்துக் கொள்ளும்! துன்பநேரத்தில் நீரே என்னை ஆறுதல்படுத்தி, என் கண்ணீரைத் துடைத்து, கவலைகளை மாற்றும்! ஆண்டவரே! உம்முடைய கண்களில், மனுஷர் கண்களில் தயவு கிடைக்கப் பண்ணும்! இயேசுவே! எப்பொழுதும் உமது சமுகத்தை வாஞ்சிக்க, ஜெபிக்க கிருபை தாரும்! என்னை பெலப்படுத்தி உமது சமாதானத்தினால் நிரப்பும்!

இயேசுவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு என்னை ஆசீர்வதிப்பதற்காக நன்றி!

***இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! ஜெபம் கேளும் நல்ல பிதாவே! ஆமென்!***

*''நீ உன் பிள்ளைகளின் பிள்ளைகளையும்... சமாதானத்தையும் காண்பாய்'' (சங் 128:6)*

## 7. திருமணத்திற்காக!

''மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன்'' (ஆதி 2:18)

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே! உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!**

இயேசுவே! என்னை உமது இரக்கமுள்ள கரங்களில் ஒப்புவிக்கிறேன்! எனது திருமண வாழ்க்கைக்காக உமது சமுகத்தில் பாரத்தோடு ஜெபிக்கிறேன்! இரக்கமுள்ளவரே! உமது தெய்வீக சித்தத்தின்படி எனக்கு நல்ல ஒரு வாழ்க்கைத் துணையை ஏற்படுத்தித் தரும்படி வேண்டுகிறேன்! இயேசுவே! உம்மை நேசிக்கிற, உமக்குப் பயப்படுகிற நல்ல குணசாலியான கணவனை/மனைவியை எனக்கு தாரும்! உமது வேதவசனங்களுக்கு கீழ்ப்படிகிற, உமது சித்தத்தை செய்கிற நல்ல கணவனை/மனைவியை திருமணம் செய்ய உதவி



செய்யும்! ஆண்டவரே! உம்மைத் தேடுகிற, ஜெபத்தில் காத்திருக்கிற கணவனை/மனைவியை வாழ்க்கைத் துணையாய் தந்தருளும்! நன்மையான ஈவுகளை அருளும் இயேசுவே! நல்ல துணையை ஏற்படுத்திக் கொடுத்து என் வாழ்க்கையில் நன்மையைக் காணச் செய்யும்! இயேசுவே! உமது இருதயத்திற்கேற்ற நல்ல துணையை எனக்குத் தந்து திருமண வாழ்க்கையை ஏற்படுத்தி என்னை ஆசீர்வதித்து உயர்த்தும்!

இயேசுவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு எனக்கு நல்ல ஒரு வாழ்க்கைத் துணையை ஏற்படுத்தி என்னை ஆசீர்வதிப்பதற்காக உமக்கு நன்றி!

***இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! வல்லமையுள்ள பிதாவே! ஆமென்!***

''உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சக்கொடியைப் போல இருப்பாள்'' (சங் 128:3)

# 8. சுகப் பிரவசத்திற்காக!

''பெறப்பண்ணுகிறவராகிய நான் பெறச் செய்யாமல் இருப்பேனோ'' (ஏசா 66:9)

***பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே! உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!***

இயேசுவே! என்னை உமது கிருபையுள்ள கரங்களில் அர்ப்பணித்து ஜெபிக்கிறேன்! இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம்; கர்ப்பத்தின் கனி உம்மால் கிடைக்கும் பலன் என்ற வசனத்தின்படி ஆண்டவரே! நீர் எனக்கு தந்த கர்ப்பத்தின் கனிக்காக நன்றி! இயேசுவே! கர்ப்பத்தின் கனியை உமது கரத்தில் அர்ப்பணித்து ஜெபிக்கிறேன்! அற்புதங்களைச் செய்யும் இயேசுவே! இப்பொழுதும் எனது சுகப்பிரசவத்திற்காக உம்மை நோக்கி ஜெபிக்கிறேன்! இயேசுவே! என்மேல் கிருபையாய் மனமிரங்கி எனக்கு ஒரு அற்புதத்தைச் செய்யும்! ஆண்டவரே! எனக்கு ஏற்படும்



பயங்களை, சோர்வுகளை, பெலவீனங்களை நீக்கி நல்ல திட நம்பிக்கையைத் தாரும்! பிரசவத்தை எதிர்நோக்கியிருக்கிற எனக்கு நல்ல சுகத்தையும், பெலத்தையும், ஆரோக்கியத்தையும் தந்தருளும்! உமது கண்களில் எனக்கு கிருபை கிடைக்கட்டும்! பிள்ளையைப் பெறப்பண்ணுகிறவரே! உமது பரிபூரண சித்தத்தின்படி ஏற்ற நேரத்தில் நல்ல சுகப்பிரசவத்தை கட்டளையிட்டு என்னை ஆசீர்வதித்து மேன்மைப்படுத்தும்!

எனக்காக யாவையும் செய்துமுடிக்கும் இயேசுவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு சுகப்பிரசவத்தின் மூலம் பிள்ளையை பெறும்படி கிருபை செய்து என்னை ஆசீர்வதிப்பதற்காக உமக்கு நன்றி!

***இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! வல்லமையுள்ள பிதாவே! ஆமென்!***

*''பிரசவிக்கப் பண்ணுகிறவராகிய நான் பிரசவத்தைத் தடுப்பேனோ'' (ஏசா 66:9)*

## 9. பிரச்சினைகள் நீங்க!

''வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்'' (மத் 11:28)

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே! உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!**

இயேசுவே! உமது கிருபையுள்ள கரங்களில் என்னை அர்ப்பணிக்கிறேன்! ஆண்டவரே! எனது வாழ்க்கையில் காணப்படும் பிரச்சினைகளுக்காக உம்மை நோக்கிப் பார்க்கிறேன்! இளைப்பாறுதலைத் தரும் இயேசுவே! என்னை நெருக்கும் பிரச்சினைகளிலிருந்து பரிபூரண விடுதலையைத் தாரும்! சமாதானத்தையும், சந்தோஷத்தையும், மனஅமைதியையும் இழந்து தவிக்கும் என்மேல் கிருபையாயிரும்! இரக்கம் நிறைந்த இயேசுவே! பல்வேறு சூழ்நிலைகளில் ஏற்படும் பிரச்சினைகளினால் குழம்பித் தவிக்கும் என்னைக்



கண்ணோக்கிப் பாரும்! மனதளவில் உடைந்து காணப்படும் என் உள்ளத்தின் காயங்களைத் தொட்டு குணமாக்கும்! இயேசுவே! பிரச்சினைகளைக் கண்டு நான் சோர்ந்துபோகாமல் அவைகளை மேற்கொள்ள உதவி செய்யும்! பிரச்சினைகளைத் துணிந்து எதிர்கொள்ள வேண்டிய திட நம்பிக்கையைத் தாரும்! இயேசுவே! எனக்கெதிராய் வரும் எந்த பிரச்சினையையும் நான் பார்க்காதபடிக்கு உம்மையே நோக்கிப் பார்க்க எனக்கு கிருபை தாரும்! ஆண்டவரே! பிரச்சினைகளின் மத்தியில் நீரே என்னை கரம்பிடித்து நடத்தி ஆசீர்வதியும்!

இயேசுவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு எல்லாப் பிரச்சினைகளையும் மாற்றி என்னை ஆசீர்வதிப்பதற்காக நன்றி!

***இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! வல்லமையுள்ள பிதாவே! ஆமென்!***

*''உங்கள் இருதயம் கலங்காமலும், பயப்படாமலும் இருப்பதாக'' (யோவா 14:27)*

## 10. தோல்வி எண்ணங்கள் மாற!

*''நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்'' (ரோம 8:37)*

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே! உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!**

இயேசுவே! உமது கிருபையுள்ள கரங்களில் என்னை அர்ப்பணிக்கிறேன்! ஆண்டவரே! எனது தனிப்பட்ட *வாழ்க்கையில் / வேலையில் / தொழிலில்* எடுக்கிற ஒவ்வொரு முயற்சியிலும் தோல்வியையே சந்தித்து வரும் என் வாழ்க்கை பாதையை மாற்றும்படியாக ஜெபிக்கிறேன்! இரக்கம் நிறைந்தவரே! என் வாழ்க்கை முழுவதும் தோல்வி யடைந்த நிலையில் உள்ளம் உடைந்து செய்வதறியாது திகைத்து நிற்கும் என் மேல் கிருபையாய் மனம் இரங்கும்! இயேசுவே! எப்பொழுதும் தோல்வி எண்ணங்களே எனது உள்ளத்தில்



ஏற்படுவதால் எந்தவொரு காரியத்தி லும் வெற்றியைக் காணமுடியவில்லை! ஜெயத்தைக் கொடுக்கிறவரே! தோல்வி நிறைந்த என் வாழ்க்கைப் பாதையை மாற்றி வெற்றியுடன் வாழ எனக்கு உதவி செய்யும்! உள்ளத்தில் ஏற்படும் தோல்வி எண்ணங்களை மாற்றும்! ஆண்டவரே! என்னுடைய தனிப்பட்ட *வாழ்க்கையில் / வேலையில் / தொழிலில்* எல்லாக் காரியங்களிலும் வெற்றியைத் தந்து என்னை ஆசீர்வதித்து உயர்த்தும்! இயேசுவே! சமாதானத்தையும், சந்தோஷத்தையும், எனக்குத் தாரும்!

இயேசுவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு தோல்வி எண்ணங்களை மாற்றி வெற்றி யைத் தந்து ஆசீர்வதிப்பதற்காக நன்றி!

***இயேசுகிறிஸ்துவின் உன்னத நாமத்தில் ஜெபிக்கிறேன்! பரம பிதாவே! ஆமென்!***

*''நாம் நம்மில் அன்பு கூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர் களாயிருக்கிறோமே'' (ரோம 8:37)*

## 11. பெலவீனங்கள் நீங்க!

*"என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவி னாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு" (பிலி 4:13)*

**பலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே! உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!**

இயேசுவே! உமது கிருபையுள்ள கரங்களில் என்னை அர்ப்பணிக்கிறேன்! இரக்கமுள்ள ஆண்டவரே! என்னுடைய சரீரத்தில் காணப்படும் பெலவீனங்கள் நீங்கும்படி கண்ணீரோடு ஜெபிக்கிறேன்! பாவங்களை, மன்னிக்கிற இயேசுவே! கடந்த காலங்களில் நான் செய்த பாவங்களினால் பெலவீனங்களோடு இருக்கும் என்னை தயவாய் மன்னியும்! இயேசுவே! உம்முடைய இரத்தத்தால் என்னைக் கழுவி உம் பிள்ளையாய் சேர்த்துக் கொள்ளும்! பெலனைத் தரும் இயேசுவே! என் சிறுமையைக் கண்ணோக்கிப் பாரும்! என் கண்ணீரைத்



துடைத்து, என்னை ஆறுதல்படுத்தும்! என்னைப் பெலப்படுத்தி கண்ணீரைத் துடைத்தருளும்! இயேசுவே! உள்ளம் உடைந்துபோன என்னை தேற்றி உமது பெலத்தினால் நிரப்பும்! என் பெலவீ னங்களை சிலுவையில் சுமந்தவரே! உமது கரத்தினால் என்னை தொட்டு சுகமாக்கும்! ஆண்டவரே! இனிமேலும் பெலவீனங்கள் என்னை தாக்காதபடி உமது இரத்தத்தால் என்னை மறைத்து பாதுகாத்துக் கொள்ளும்! என்னை உமது சமாதானத்தினாலும், சந்தோ ஷத்தினாலும் நிரப்பி ஆசீர்வதியும்!

இயேசுவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு பெலவீனங்களை என்னை விட்டு நீக்கி ஆசீர்வதிப்பதற்காக உமக்கு நன்றி!

***இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! வல்லமையுள்ள பிதாவே! ஆமென்!***

*"என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத் திலே என் பலன் பூரணமாய் விளங்கும்" (IIகொரி 12:9)*

## 12. சோர்வுகள் நீங்க!

''சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத் தைப் பெருகப்பண்ணுகிறார்'' (உபா 28:12)

***பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே! உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!***

இயேசுவே! உமது இரக்கமுள்ள கரங்களில் என்னை ஒப்புவிக்கிறேன்! ஆண்டவரே! எனது வாழ்க்கையில் குடும்பத்தினரால், உறவினர்களால், நண்பர்களால் ஏற்படும் சோதனைகள், பாடுகள், வேதனைகள், துயரங்கள், தோல்விகள், ஏமாற்றங்கள் போன்ற பல்வேறு சூழ்நிலைகளினால் மிகவும் சோர்ந்துபோய் காணப்படும் என்னை கண்ணோக்கிப் பாரும்! இயேசுவே! எல்லா சோர்வுகளையும் நீக்கி என்னைப் பெலப்படுத்தும்! ஒருவரும் தேற்றுவாரின்றி காணப்படும் என்னை ஆறுதல்



படுத்தும்! எல்லாராலும் கைவிடப்பட்ட நிலையில் நீர் என்னை சேர்த்துக் கொள்ளும்! இயேசுவே! என் உள்ளத்தில் ஏற்பட்டுள்ள மனக்காயங்களை உம்முடைய கரத்தினால் தொட்டு ஆற்றும்! சோர்வுகளை நீக்கும் இயேசுவே! என் வாழ்க்கையில் வரும் பாடுகள், வேதனைகள், போராட்டங்கள், பிரச்சினைகள், நெருக்கங்களைக் கண்டு நான் சோர்ந்து போகாதபடிக்கு என்னை உமது கிருபையினால் சூழ்ந்துகொள்ளும்! என்னைக் கரம் பிடித்து நடத்தி ஆசீர்வதித்து மேன்மைப்படுத்தும்!

இயேசுவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு சோர்வுகளை நீக்கி புதுபெலன் தந்து ஆசீர்வதிப்பதற்காக உமக்கு நன்றி!

***இயேசுகிறிஸ்துவின் உன்னத நாமத்தில் ஜெபிக்கிறேன்! பரம பிதாவே! ஆமென்!***

''என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு'' (பிலி 4:13)

# 13. துக்கம் மாற!

*''கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சமாயி ருப்பார்; உன் துக்கநாட்கள் முடிந்துபோம்''*
*(ஏசா 60:20)*

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே! உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!**

இயேசுவே! உமது கிருபையுள்ள கரங்களில் என்னை அர்ப்பணித்து ஜெபிக்கிறேன்! ஆண்டவரே! எனது வாழ்க்கையில் காணப்படும் கவலைகள், பாடுகள், வேதனைகள், உபத்திரவங்கள், போராட்டங்கள், இழப்புகள் மற்றும் குடும்ப சூழ்நிலைகளினால் மிகவும் கலங்கி துக்கத்தோடு வாழ்ந்துவரும் என்னைக் கண்ணோக்கிப் பாரும்! என் மேல் கிருபையாய் மனமிரங்கும்! சந்தோஷத்தை அருளும் இயேசுவே! என் துக்கத்தை சந்தோஷமாக மாற்றி என்னை ஆறுதல்படுத்தும்! என் கண்ணீரைத் துடைத்து, சஞ்சலத்தை



மாற்றும்! ஆண்டவரே! துக்கத்தினால் ஏற்பட்ட சோர்வுகள், கவலைகள், பிரச்சினைகள், சரீர பெலவீனங்களி லிருந்து விடுதலையைத் தாரும்! இயேசுவே! என் உள்ளத்தில் நிம்மதி யையும், மனஅமைதியையும் தாரும்! எனது வாழ்க்கையில் இனி உம்மையே நோக்கிப் பார்க்க கிருபை தாரும்! உம்மிடத்திலிருந்து இளைப்பாறுதலைத் பெற்றுக்கொள்ள உதவி செய்யும்! என்னை சந்தோஷத்தினால், மகிழ்ச்சி யினால் நிரப்பும்! தாயைப் போல தேற்றுபவரே! என் துக்கத்தை மாற்றி என்னைப் பெலப்படுத்தி ஆசீர்வதியும்!

ஆண்டவரே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு என் துக்கத்தை சந்தோஷமாக மாற்றி என்னை ஆசீர்வதிப்பதற்காக நன்றி!

***இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! வல்லமையுள்ள பிதாவே! ஆமென்!***

*''உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்''*
*(யோவா 16:20)*

## 14. உபத்திரவங்கள் மாற!

*''உபத்திரவப்பட்டவனுடைய உபத்திரவத்தை அவர் அற்பமாயெண்ணாமல்... அவன் கூப்பிடுகையில் கேட்டருளினார்'' (சங் 22:24)*

***பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே! உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!***

இயேசுவே! என்னை உமது இரக்கமுள்ள கரங்களில் ஒப்புவித்து ஜெபிக்கிறேன்! மனதுருக்கமுள்ள இயேசுவே! எனது வாழ்க்கையில் காணப்படும் எல்லா உபத்திரவங்களையும் மாற்றும்படியாக உம்முடைய சமுகத்தில் கண்ணீரோடு வேண்டுகிறேன்! ஆண்டவரே! மிகுந்த உபத்திரவங்களினால் எனது சந்தோஷத்தையும், சமாதானத்தையும் இழந்து தவிக்கிற என்மேல் கிருபையாயிரும்! சிறுமைப்பட்டவனுக்கு அடைக்கலமான இயேசுவே! என் வாழ்க்கையில் ஒரு அற்புதம் செய்யும்! என் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள உபத்திரவங்களிலிருந்து



என்னை முற்றிலுமாக விடுவிக்கும்படியாக ஜெபிக்கிறேன்! நெருக்கப்படுகிறவர்களுக்கு தஞ்சமான இயேசுவே! உபத்திரவங்களினால் சிறுமைப்பட்டுள்ள என்னை கண்ணோக்கிப் பாரும்! என் வாழ்க்கையில் உபத்திரவங்களை நீக்கி என்னை ஆசீர்வதியும்! என் உள்ளத்தில் காணப்படும் சஞ்சலத்தையும், கலக்கத்தையும் எடுத்துப் போடும்! இயேசுவே! நீர் என்னோடுகூட இருந்து என்னைக் கரம்பிடித்து நடத்தும்! ஆண்டவரே! உமது சந்தோஷத்தினால், சமாதானத்தினால், மகிழ்ச்சியினால் நிரப்பும்!

இயேசுவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு உபத்திரவங்களிலிருந்து என்னை விடுவித்து ஆசீர்வதிப்பதற்காக உமக்கு நன்றி!

***இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! வல்லமையுள்ள பிதாவே! ஆமென்!***

*''அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் அவனைவிடுவிப்பேன்'' (சங்91:14)*

## 15. வறுமை சூழ்நிலைகள் மாற!

*''கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது'' (சங் 34:10)*

***பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே! உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!***

இயேசுவே! உமது மகிமையுள்ள கரங்களில் என்னை ஒப்புவிக்கிறேன்! எனது வாழ்க்கையில் காணப்படும் வறுமை சூழ்நிலைகள், தரித்திர நிலைமைகள் மாறும்படி கண்ணீரோடு ஜெபிக்கிறேன்! இயேசுவே! என்மேல் கிருபையாய் மனமிரங்கும்! மன்னிப்பை அருளும் இயேசுவே! உமது வேதத்தின் ஆலோசனைகளை நான் கேட்காமல் வறுமையில் சிக்கிய என்னை தயவாய் மன்னியும்! நன்மையினால் நிரப்பும் ஆண்டவரே! எனது வாழ்க்கையில் காணப்படும் வறுமை சூழ்நிலைகளை, தரித்திர நிலைமைகளை, சாபங்களை மாற்றும்! என்னுடைய குறைவுகளை



நிறைவாக்கும்! ஆண்டவரே! உமது ஐசுவரியத்தினால், பரிபூரணத்தினால் ஆசீர்வாதங்களினால் நிரப்பும்! என் கைகளின் பிரயாசங்களை ஆசீர்வதியும்! நான் கையிட்டுச் செய்கிற வேலையை/ தொழிலை ஆசீர்வதியும்! ஆண்டவரே! எனது வாழ்க்கையில் மேன்மையைக் கட்டளையிடும்! நான் இழந்துபோன ஆசீர்வாதங்களை, இரட்டிப்பாய் தந்து என்னை ஆசீர்வதித்து உயர்த்தும்! உமது சந்தோஷத்தினாலும், சமாதானத்தினாலும் என்னை நிரப்பும்!

இயேசுவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு என் வறுமை சூழ்நிலைகளை மாற்றி ஆசீர்வதித்து உயர்த்துவதற்காக நன்றி!

***இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! ஜீவனுள்ள நல்ல பிதாவே! ஆமென்!***

*''தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம்... நிறைவாக்குவார்'' (பிலி 4:19)*

## 16. அடிமைத்தனம் நீங்க!

''இயேசுகிறிஸ்து உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்'' (மத் 8:34)

***பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே! உம்மை துதிக்கிறேன்! ஸ்தோத்தரிக்கிறேன்!***

இயேசுவே! உமது வல்லமையுள்ள கரங்களில் என்னை அர்ப்பணித்து ஜெபிக்கிறேன்! ஆண்டவரே! பிசாசின் அடிமைத்தனத்தில் சிக்கித் தவிக்கிற என்னை விடுதலையாக்கும்படியாக கண்ணீரோடு ஜெபிக்கிறேன்! கட்டுண்டவர்களை விடுதலையாக்கும் இயேசுவே! என்மேல் கிருபையாய் மனமிரங்கி விடுதலையைத் தாரும்! எனக்காக இரத்தத்தைச் சிந்தின இயேசுவே! நான் செய்த பாவங்களை உம்முடைய இரத்தத்தால் கழுவி, என்னை உமது பிள்ளையாக சேர்த்துக் கொள்ளும்! ஆண்டவரே! அடிமைத்தனத்தினால்



நிம்மதியை, சமாதானத்தை இழந்து தவிக்கிற என்மேல் இரக்கமாயிரும்! பிசாசின் வல்லமைகளை அழித்தவரே! உமது வல்லமையுள்ள வார்த்தையை அனுப்பி என்னை விடுதலையாக்கும்! என்னை அடிமைப்படுத்தி வைத்துள்ள பிசாசின் வல்லமைகள் இயேசுவின் நாமத்தில் விலகட்டும்! எனக்கு எதிராக உருவாக்கப்படும் ஆயுதம் வாய்க்காமல் போவதாக! இயேசுவே! உமது இரத்தத்தால் என்னை மறைத்தருளும்! ஆண்டவரே! உமது சமாதானத்தினால், சந்தோஷத்தினால் என்னை நிரப்பும்!

இயேசுவே! நீர் என் ஜெபத்தைக் கேட்டு அடிமைத்தனத்திலிருந்து என்னை விடுதலை தந்து ஆசீர்வதிப்பதற்காக நன்றி!

***இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! வல்லமையுள்ள பிதாவே! ஆமென்!***

''பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும்'' (சக 4:6)

## பிரார்த்தனையைக் கேட்கும் இயேசு!

''ஏழைகளின் ஜெபத்தை ஆண்டவர் கேட்டருளுகின்றார்'' (சங் 68:33)

✲ ''என்னை (இயேசுவை) நோக்கிக் கூப்பிடு; நாம் உனக்குச் செவி சாய்ப்போம்'' (எரே 33:3)

✲ ''இயேசுவை நோக்கிக் கூப்பிடுவேன்; அதனால் என் எதிரிகளிடமிருந்து காக்கப் பெறுவேன்'' (IIசாமு 22:4)

✲ ''என்னை (இயேசு) நோக்கிக் கூப்பிடுவான் அவன் ஜெபத்தைக் கேட்பேன்; துன்ப வேளையில் அவனோடு இருப்பேன்; அவனைத் தப்புவித்து பெருமைப்படுத்துவேன்'' (சங் 90:15)

✲ ''இயேசுவை நோக்கி எந்நேரத்தில் கூவியழைத்தாலும் என் எதிரிகள் பின்னடைந்து போவர்: இயேசு என் சார்பாய் உள்ளார்; இதை நான் நன்கறிவேன்'' (சங் 55:9)



✲ ''இயேசுவினிடத்தில் உன் இன்பத்தைத் தேடு; அப்போது உன் நெஞ்சம் நாடுவதை அவர் உனக்குத் தருவார்'' (சங் 36:4)

✲ ''நீதிமான்கள் (நாங்கள்) கூக்குரலிட்டனர்; ஆண்டவர் அவர்களுக்குச் செவிசாய்த்தார்: எல்லாத் துன்பங்களினின்றும் விடுவித்தார்'' (சங் 33:17)

✲ ''இயேசுவினிடத்தில் நீ கேட்ட மன்றாட்டை அவர் உனக்குத் தந்தருள்வார்'' (சாமு 1:17)

✲ ''இயேசுவைக் கூவியழைக்கும் யாவருக்கும் அவர் அண்மையில் உள்ளார்'' (சங் 144:18)

✲ ''இயேசுவைக் கூவியழைக்கிற யாவருக்கும் அவர் மிகுந்த அருளன்பு காட்டுகிறவர்'' (சங் 85:5)

✲ ''என் (இயேசுவின்) பெயரால் நீங்கள் எதைக்கேட்டாலும், அதை நான் செய்வேன்'' (அரு 14:14)

(கத்தோலிக்க வேதாகமத்திலிருந்து...)

## வாக்குத்தத்தங்கள்!

''தேவன் வாக்குத்தத்தம்பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறார்'' (ரோம 4:21)

✲ ''இயேசுகிறிஸ்து உன் அப்பத்தையும் உன் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார். வியாதியை உன்னிலிருந்து விலக்குவேன்'' (யாத் 23:25)

✲ ''என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும்'' (யாத் 33:14)

✲ ''கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரகாசிக்கப்பண்ணி, உன்மேல் கிருபையாயிருக்கக்கடவர்'' (எண் 6:25)

✲ ''உன் விண்ணப்பத்தைக் கேட்டேன், உன் கண்ணீரைக் கண்டேன்; இதோ, நான் உன்னைக் குணமாக்குவேன்'' (IIஇரா 20:5)

✲ ''அவர் உமது மனவிருப்பத்தின்படி உமக்குத் தந்தருளி, உமது ஆலோசனைகளையெல்லாம் நிறைவேற்றுவாராக'' (சங் 20:4)



✲ ''என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்'' (சங் 23:6)

✲ ''சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங்குறைவுபடாது'' (சங் 34:10)

✲ ''தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர்'' (சங் 46:1)

✲ ''கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார்'' (சங் 55:22)

✲ ''என் உள்ளத்தில் விசாரங்கள் பெருகுகையில், உம்முடைய ஆறுதல்கள் என் ஆத்துமாவைத் தேற்றுகிறது'' (சங் 94:19)

✲ ''கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்'' (நீதி 10:22)

✲ ''ஜெயமோ கர்த்தரால் வரும்'' (நீதி 21:31)

✲ ''நிச்சயமாகவே முடிவு உண்டு; உன் நம்பிக்கை வீண்போகாது'' (நீதி 23:18)

✲ ''உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன்'' (மீகா 7:15)

✲ ''நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்'' (ஏசா 41:10)

✲ ''நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன்'' (ஏசா 41:10)

✲ ''என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்'' (ஏசா 41:10)

''தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், ஆமென் என்றும் இருக்கிறதே'' (IIகொரி 1:20)




## வாங்கி விட்டீர்களா?

**வேதாகமத்தில் வைத்து ஜெபிக்க...**

**சிறிய முழங்கால் யுத்தம் ஜெபக் கையேடுகள்!**

1. முழங்கால் யுத்தம் - துதி பலிகள் - ரூ. 10/-
2. முழங்கால் யுத்தம் - பிரார்த்தனை நேரம் - ரூ. 5/-
3. முழங்கால் யுத்தம் - <u>பிரார்த்தனை வேளை</u> (குடும்ப ஆசீர்வாதங்களுக்காக) - ரூ. 5/-
4. முழங்கால் யுத்தம் - <u>பிரார்த்தனை வேளை</u> (விடுதலைக்காக) - ரூ. 5/-
5. முழங்கால் யுத்தம் - <u>பிரார்த்தனை நேரம்</u> (ஜெப சங்கீதம்) - ரூ. 5/-
6. முழங்கால் யுத்தம் - <u>பிரார்த்தனை நேரம்</u> (தேவனின் பாதத்தில்) - ரூ. 5/-

இந்த ஜெபக்கையேடுகள் மூலம் எளிய முறையில் பிரார்த்தனை செய்து ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவிடமிருந்து இரட்சிப்பையும், ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ளலாம்!

**ஜெபவீரர்கள்... இந்த ஜெபக் கையேடுகளை வாங்கி மற்றவர்களுக்கு அன்பளிப்பாகக் கொடுத்து ஜெபிக்க வைக்கலாம்!**

**காணிக்கை அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்!**

## உங்களுக்காக ஜெபிக்க!

உங்களுக்காக ஜெபிக்க நாங்கள் ஆயத்தமாயிருக்கிறோம்! உங்கள் ஜெபத்தேவைகளுக்காக கடிதம் அல்லது தொலைபேசி மூலமாக எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள்!

## 24-மணி நேரமும்...

**தொலைபேசியில் ஜெபிக்க!**

**95 4344 221616, 226363**

*தொடர்பு முகவரி:*


**முழங்கால் யுத்தம்**

46/AA, சாந்தி நகர் மேற்கு
3-வது தெரு, ஓசூர் - 635 109
Email: muzhangalyuttham@yahoo.com




*Printers: Shenbagam Offset Printers*
*Sivakasi. Ph: 95 4562 220432*





EVANGELICAL LITERATURE SERVICE
G-4, Ground Floor, Ashoka Enclave
No. 12, Netaji Road, Frazer Town,
BANGALORE - 560 005
Ph : 25473388, 25478833


MUZHANGAL YUTTHAM
"PRARTHANAI NERAM"
In God's Feet
MUZHANGAL YUTTHAM
46/AA, SHANTHI NAGAR WEST
HOSUR - 635 109
E-mail : muzhangalyutham@yahoo.com